[1974 மார்ச் 23

ஊசி ஆற்றின் குறுக்கே பாலம்

* 584 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம்–சீர்காழி ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கின்ற ஊசி ஆற்றுப் பாலம் அமைக்கும் பணி எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சீர்காழி பனங்காட்டான் குடி சாலையில் மைல் 5/1-ல் குறுக்கிடும் ஊசி வாய்க்கால் மீது பாலம் அமைப்பது 1974 ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும் என மாயூரம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 585 வினா—திரு. சீ. க. வடிவேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும பணியாளர்களுக்கு ஒன்றியத்திலேயே வீடு அமைத்துத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் மேற்படித் திட்டம் முதலில் செயல்படுத்தப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஊராட்சி ஒன்றி யங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு அலுவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) குறிப்பிட்ட சில மாவட்டங்கள் அல்லாது, பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

திரு. சீ. க. வடிவேலு : திருச்சி மாவட்டத்தில் எந்த எந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். எங்கெங்கே கட்டப்படவில்லை என்கிற விவரம் தான் என்னிடம் இருக்கிறது.